E-ISSN: 2581-7140

# தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

# INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES

*(IJTLLS) UGC CARE LISTED JOURNAL*
*A Bi-Yearly Peer-Reviewed International Journal*

## ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி (தன்னாட்சி), சாத்தூர்

## SRI S.RAMASAMY NAIDU MEMORIAL COLLEGE (Autonomous), SATTUR

# பக்தி இலக்கியம்

# BHAKTHI LITERATURE

தொகுதி - 3, சிறப்பிதழ் 3, தொகுதி - 3, சனவரி 2021

VOLUME– 3, SPECIAL ISSUE 3, VOL – 3, JANUARY 2021

65 கண்ணப்பநாயனாரைப் போற்றும் திருமுறை ஆசிரியர்கள்
Admiration of the Thirumurai Writers on Kannappa Nayanar 441-449
ஜெ. விஜி / முனைவர் கு.கண்ணன்
J.Viji / Dr.K.Kannan

66 பக்தி இசையில் தோடி ராகம்
Thodi Ragam in Bhakthi Isai 450-454
வலிவலம் R.S. வெங்கட்ராமன்/ முனைவர் ரெ.எழில்ராமன்
VALIVALAM R.S. Venkatraman/ Dr. R. Ezhilraman

67 பாண்டிய நாட்டு சிவத்தலங்களில் திருப்பூவணம்
Shiva Temple of Thiruppuvanam in Pandiya Kingdom 455-460
அ. வெங்கடேஸ்வரி/ முனைவர் அ. ஜாண்பால்
A. Venkateswari/ Dr. A. Johnpaul

68 எட்டுத்தொகை அகநூல்களில் சிவ வழிபாட்டின் நிறங்கள்
Hue and Shiva Worship in the Internal Literature of "Ettuthokai" 461-464
நா.ரம்யா / முனைவர் ஆ.மகாலட்சுமி
N.Ramya / Dr A.Mahalakshmi

69 பாவைப் பாடல்களில் பக்தி சார் அறிவியல் கூறுகள்
Bhakthi Oriented Scientific Elements in Paavai Padagal 465-468
முனைவர் ம.ராணி / Dr M.Rani

70 பாண்டிய நாட்டு சிவத்தலங்களில் திருப்பூவணம்
Shiva Temple of Thiruppuvanam in Pandiya Kingdom 469-474
முனைவர் ஆ. இராஜா / Dr. A. Raja

71 ஆழ்வார்களின் திருவேங்கடப் பாசுரங்கள்
Thiruvenkata Hymns of Alvars 475-479
நா.ரெங்கலட்சுமி / N.Rengalakshmi

72 இராமயண சிற்பங்கள் உணர்த்தும் பக்தி
Realizing Devotion in Ramayana Sculptures 480-488
முனைவர் த.க.ஜாஸ்மின் சுதா / Dr.T.K.Jasmin Sudha

73 தமிழ் இலக்கியத்தில் சமணர்களின் தமிழ்த்தொண்டு
Tamil Literary Contribution of the Jains 489-495
த.லட்சுமன் / T.Lakshman

74 திருவாசகத்தில் அட்டவீரச் செயல்கள்
Eight Heroic Deeds in "Thiruvasagam" 496-503
மா.ஜெயக்குமார் / முனைவர் க.சிங்காரவேலு
M.Jayakumar / Dr.K.Singaravelu

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal



UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com
E-ISSN: 2581-7140
Vol. 3: Special Issue - 3, Vol.3, January 2021

# எட்டுத்தொகை அகநூல்களில் சிவ வழிபாட்டின் நிறங்கள்

# Hue and Shiva Worship in the Internal Literature of "Ettuthokai"

நா.ரம்யா, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.
N.Ramya, Ph.D Scholar, Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi.
ORCiD: https://orcid.org/0000-0002-5102-1827

முனைவர் ஆ.மகாலட்சுமி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.
Dr A.Mahalakshmi, Assistant Professor, Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi.
ORCiD: https://orcid.org/0000-0001-5234-0750

DOI: 10.38067/ijtlls.2021.spl.v03i03v3.068

## Abstract

*Records of worship are widespread in Sanskrit literature. Most of the people worship the deities according to the land and the environment in which they live. However, the "Tolkappiyam" proves that none of the people of the land worshiped Lord Shiva as their primary deity. Although there were many deities worshiped during the Sangam period, the worship of Shiva has been the primary worship there. The hymns of God clarify the eight volumes of "Akananuru", "Purananuru", "Aingurunuru" and "Kalittokai". Lord Shiva has been glorified by the great Puluvars. The purpose of this article is to examine the records of Lord Shiva's Mani, the color of the garland worn, and the color of the water on the body.*

**Keywords:** Hue, Shiva Worship, Internal Literature, "Ettuthokai"

## முன்னுரை

சங்க இலக்கியங்களில் தெய்வ வழிபாடு குறித்த பதிவுகள் பரவலாகக் காணப்படுகிறது. அதிலும் மக்கள் வாழ்கின்ற நிலத்திற்கேற்பவும், சூழலுக்கு ஏற்பவும் தெய்வங்களை முதன்மைப்படுத்தி வழிபட்டுள்ளனர். இருப்பினும் நானில மக்களுள் எவரும் சிவபெருமானை முதன்மைக் கடவுளாகக் கொண்டு வழிபடவில்லை என்பதற்கு தொல்காப்பியம் சான்றாக முன்னிற்கின்றது. சங்க காலத்தில் பல தெய்வ வழிபாடு இருந்தாலும் சிவவழிபாடு அங்கு முதன்மை வழிபாடாகக் இருந்திருக்கிறது. *எட்டுத் தொகை* நூல்களான அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய நூல்களின் கடவுள் வாழ்த்து பாடல்கள் தெளிவுறுத்துகிறது. சிவபெருமானைப் புலவர் பெருமக்கள் முன்னிறுத்தியுள்ளனர். மேலும் அப்பாடல்களின் இடம்பெறும் சிவனது மேனி நிறம், அணிந்த மாலையின் நிறம், உடலில் பூசியிருக்கின்ற திருநீற்றின் நிறம் குறித்த பதிவுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### சங்க இலக்கியங்களில் சிவனின் வேறு பெயர்கள்

சங்க இலக்கியங்களில் சிவன் என்ற சொல்லாட்சி இடம்பெறவில்லை. அதற்கு மாறாக *ஆதிரையான், ஆலமர் செல்வன், ஆனேற்றுக் கொடியுடையான், ஈசன், ஈர்ஞ்சடை அந்தணன்,*

E-ISSN: 2581-7140
Vol. 3: Special Issue - 3, Vol.3, January 2021
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

*காலக்கடவுள், தாழ்சடைப் பெரியோன், நீலமேனி வாலிழைபாகத்து ஒருவன், மணிமிடற்றன், முக்கட்செல்வன்* என்ற பெயர்களால் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**சிவ வழிபாடு**

சங்ககால மக்களிடம் சிவனைத் தவிர பிற தெய்வங்களான மாயோன், சேயோன், வேந்தன், வருணன், மற்றும் கொற்றவை குறித்த வழிபாடுகளும் சிறு தெய்வ வழிபாடுகளும் சிறப்பாக இருந்திருந்தது. இதனை இலக்கண நூலான தொல்காப்பியம்,

**மாயோன் மேய காடுறை யுலகமும்**

**சேயோன் மேய மைவரை யுலகமும்**

**வேந்தன் மேய தீம்புன லுலகமும்**

**வருணன் மேய பெருமண லுலகமும்**

**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**

**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே (தொல். பொருள்.5)**

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் நானிலத்துக்குரிய தெய்வங்களைக் குறிப்பிடுகிறார். எந்நிலத்திற்கும் உரிய கடவுளாக சிவபெருமானைக் குறிப்பிடவில்லை. இதனால் பழங்காலத்து மக்களிடையே சிவவழிபாடு அதிக அளவில் செல்வாக்கு பெறவில்லை என்பது அறியலாகிறது. இதனை *"சிவன் ஒரு நிலத்துக்கேனும் உரிய தெய்வமாகக் கருதப்படாதது கவனிக்கத்தக்கது. சங்க நூல்களில் மிகச் சில இடங்களிலேயே சிவனைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. ஆனால் ஓரிடத்திலேனும் ஒரு நிலத்திற்குரிய தெய்வமாகக் கூறப்படவில்லை"* (தமிழர் சார்பு, ப.85) என்று சு.வித்தியானந்தன் கூறுகிறார்.

**சிவனின் மேனி செம்மை நிறம்**

சிவபெருமானின் மேனி நிறம் செம்மையா நீலமா என்ற குழப்பம் நம் மக்களிடையே அதிகமாக இருக்கிறது. இதற்கு காரணம் பெரும்பாலானப் பத்திரிக்கைகளிலும் கோவில் கடைகளில் விற்பனை செய்யும் புகைப்படத்திலும் சிவனை நீல நிறமாக காண்பிக்கின்றனர். இதனால் சிவனின் திருமேனி நீலநிறம் என்று எண்ணி விடுகின்றனர். உண்மையில் சிவன் செம்மை நிறத்தை உடையவன் என்பதை இலக்கியங்களின் வழி அறியலாகிறது. சிவபெருமான் செவ்வானத்தை போன்று சிவந்த திருமேனியை உடையவனும் அவ்வனத்தில் தோன்றுகின்ற பிறைச் சந்திரனைப் போன்ற வெண்மையான பற்களை உடையவன் என்பதை,

**செவ்வான் அன்ன மேனி அவ்வான்**

**இலங்கு பிறை அன்ன விலங்கு வால் வை எயிற்று (அகம், கடவுள் வாழ்த்து. பா.1:8-9)**

என்ற பாடல் மூலம் அறியலாம். இதேபோன்று சிவபெருமான் சிவந்த வானத்தைப் போன்ற திருமேனியை உடையவன் என்பதை,

**நெருப்பான மேனியர் செங்காட்டிலாத்தி நிழலருகே**

**இருப்பார் திருவுளம் எப்படியோ இன்னம் என்னை அன்னை (பட்டினத்தார் பா.104)**

என்ற பாடலின் பட்டினத்தார் சிவனின் சிவந்த நிறத்தைக் குறிப்பிடுகிறார்.

**திருநீற்றை பூசல்**

சிவபெருமான் தன் உடம்பு முழுவதும் திருநீற்றைப் பூசி கொண்டுள்ளதை இலக்கியங்களில் புலவர்கள் புலப்படுத்தியுள்ளார். இச்செய்தியை, **"மண்டுஅமர் பலகடந்து, மதுகையில் நீறு அணிந்து" (கலித்.க.வாழ்த்து. பா.1:8)** என்ற அடியில் மூலம் சிவபெருமான் சிவந்த மேனியில் வெண்மையான சாம்பல் பூசியதை உணரமுடிகிறது. மேலும், நான்காம் திருமுறையில் திருநாவுக்கரசர் பவளம் போன்ற சிவந்த மேனியில் பால் போன்ற வெண்மையான வெண்ணீற்றை பூசியதை,

**குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்**
**பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்**
**இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே (பாடல்.4)**

என்ற பாடல் குறிப்பிடுகிறது. சிவபெருமானை வெண்ணீறு செம்மேனி என்றும் வெண்ணீற்றார் செம்மேனியர் என்றும் ஆறாம் - எட்டாம் திருமுறையும் குறிப்பிடுகிறது.

**சிவபெருமான் மிடற்றின் நிறம்**

சிவபெருமானின் மேனி செந்நிறமாக இருந்தாலும் கழுத்துப் பகுதி மட்டும் நீல நிறமாக இருப்பதை நீலமணிக்கு உவமையாக புலவர்கள் கையாண்டுள்ளதை, **"யாழ் கெழு மணி மிடற்று அந்தணன்" (அகம் கடவுள் வாழ்த்து பாடல்15)** என்ற அடியில் மூலம் அறியலாம். இச்செய்தியை நீலமணி போன்ற கழுத்தினை உடையவன் சிவபெருமான் என்பதை,

**"மாறாப்போர் மணிமிடற்று எண் கையாய் கேள் இனி" (கலித்தொகை.பா.1:4)**

என்ற அடி மூலம் உணர முடிகிறது.

**சிவபெருமானின் மாலையின் நிறம்**

சிவபெருமான் அணிந்திருக்கும் மலர் மாலைகளின் நிறத்தை புலவர் பெருமக்கள் உவமையாக எடுத்தியம்பியதை இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகிறது. கார்காலத்தில் மலரக் கூடிய பொன் போன்ற நிறத்தை உடைய கொன்றை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்தவன் சிவபெருமான் என்பதை, **"கார் விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்" (அகம்.,கடவுள் வாழ்த்து. பாடல்1:1)** என்ற வரியில் மூலம் அடையலாம். இதே போன்று சிவபெருமான் வெள்ளெருக்கம் மலர் மாலையையும் அணிந்தவன் என்ற செய்தியை, **"விரை உடைய வெள்ளெருக்கம் கண்ணி யானை" (ஆறாம் திருமுறை.ப.5)** என்ற அடியில் அறியமுடிகிறது.

**வாலிழைபாகத்து ஒருவன்**

சிவபெருமானின் திருமேனி செம்மை நிறத்தில் இருந்தாலும் தன் ஒரு பாகத்தை

E-ISSN: 2581-7140
Vol. 3: Special Issue - 3, Vol.3, January 2021
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

உமையம்மைக்கு கொடுத்து அர்த்தநாரீஸ்வரராக காட்சித் தரும் பொழுது சிவபெருமான் நீல நிறமாக இருக்கின்றான். அதற்கு காரணம் சிவந்த மேனியையுடைய சிவபெருமான் கருமை மேனியையுடை உமையம்மைக்கு ஒரு பாகத்தை கொடுத்ததால் செம்மையும் கருமையும் சேர்ந்து நீலநிறமாக மாறியது. இலக்கியத்திலும் புலவர்கள் இதனை பதிவுச்செய்துள்ளனர்.

நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ
மூவகை உலகும் மகிழ்ந்தன முறையே" (ஐங்குறுநூறு கடவுள் வாழ்த்து பாடல்)

என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றது. இவ்வாறாக எட்டுத்தொகை அகநூல்களில் சிவ வழிபாட்டின் பயன்படுத்தும் மாலையின் நிறம் சிவனின் நிறம் இலக்கியங்களின் கூறப்படும் சிவனின் பெயர்கள் போன்றவற்றை பற்றி இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

**துணைநூல் பட்டியல்**

[1] முனைவர் அ. தட்சிணாமூர்த்தி. அகநானூறு. மணிமேகலை பிரசுரம், சென்னை, 1998.
[2] முனைவர் அ. தட்சிணாமூர்த்தி. *ஐங்குறுநூறு*. மணிமேகலை பிரசுரம், சென்னை, 1998.
[3] முனைவர் அ. தட்சிணாமூர்த்தி. *கலித்தொகை* . மணிமேகலை பிரசுரம், சென்னை, 1998.
[4] சு.வித்தியானந்தன். தமிழர் சார்பு. பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1980.
[5] இளம்பூரணர். *தொல்காப்பியம்* . மணிமேகலை பிரசுரம், சென்னை, 1981.
[6] நான்காம் & ஆறாம் திருமுறை. திருப்பனந்தாள் மடம், 1985.

**தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:**
**ரம்யா & மகாலட்சுமி. "எட்டுத்தொகை அகநூல்களில் சிவ வழிபாட்டின் நிறங்கள்."** *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 3, தொகுதி 3, ஜனவரி 2021, பக். 461-464. டிஒஐ: **10.38067/ijtlls.2021.spl.v03i03v3.068**

**Cite this Article in English (MLA 8 Style) as:**
**Ramya & Mahalakshmi. "Hue and Shiva Worship in the Internal Literature of "Ettuthokai"."** *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 3, Vol. 3, January 2021, pp. 461-464. DOI: **10.38067/ijtlls.2021.spl.v03i03v3.068**

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement:** இல்லை /NIL
**கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement:** இல்லை /Nil
**கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். /I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. The content of the article is licensed under Creative Commons Attribution4.0 International License.